# தமிழ்ச் சித்தர்களும் பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களும்

# Tamil Sithargalum Palaya Erpattu Eraivakinargalum

**தே. எட்வர்ட்**
பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர்
கிறித்தவத் தமிழியல்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**D. Edward**
*Part Time Research Scholar*
*Department of Christian Tamil Studies*
*Madurai Kamaraj University, Madurai*

**ஆய்வுச் சுருக்கம்**

*மனிதவாழ்வில் பல்வேறு நடத்தைகள் காணப்படுகின்றன. அந்நடத்தைகள் யாவும் குறிப்பிட்ட பண்பாட்டு நிறுவனத்தைச் சார்ந்தனவாக அமைகின்றன. குடும்பம், திருமணம், குழந்தைப்பேறு, உறவுகளைப் பேணுதல், விருந்தோம்பல், கொடையளித்தல், வறியவர்க்கு உதவுதல் என்பன சமூக நிறுவனங்களில் ஒன்றான குடும்பத்தின் நடத்தைகள் எனலாம். இது போல கல்வி, சட்டம், சாதி, சமயம் என்பன போன்ற சில நிறுவனங்களும் சமூகத்தில் தொழிற்படுகின்றன.*

***முக்கியச் சொற்கள்:***

*பழைய ஏற்காடு, சித்தர்கள், சமயம், இறைக்கொள்கை, இறைவாக்கினர்கள், உருவ வழிபாடு*

**Abstract**

*Different behaviors are found in human life. All of those behaviors depend on the particular cultural institution. Family, marriage, childbearing, maintaining relationships, hospitality, generosity, and helping the poor are all family behaviors in one of the social institutions. Similarly, some institutions such as education, law, caste and religion also operate in the community.*

***Keywords:***

*Old Testament, Siddhargal, religion, theology, atheists, idolatry*

**Citation**

Edward, D. “Tamil Sithargalum Palaya Erpattu Eraivakinargalum.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 2, 2021, pp. 35–41.

CC BY SA

https://doi.org/10.528110.5281/zenodo.20327604

**முன்னுரை**

*மனிதர்கள் ஒவ்வொன்றோடும் தம்மைப் பிணைத்துக் கொண்டுதான் வாழ்க்கை நடத்துகின்றனர். இதில் பழமையானவற்றை கடிந்து கொள்ளுதல் ஒவ்வொரு சூழலிலும் தோற்றம் பெறுகின்றன. பழையானவை நடப்பச் சமுதாய மக்களுக்கு ஏற்புடையன அல்ல என்ற கருத்து உருவாக்கம் பெறுவது இயல்பாகும். உதாரணமாக மகிழுந்துகள் உருவான போது அதுவரை வாகனமாகப் பயன்படுத்தப்பட்ட முறை கேலிக்குரியதாகவும் அடிமைத்தன செயலாகவும் கருதப்பட்டது. அப்போது பல்லக்குத் தூக்கிகள் தம் பணி மகிழுந்துகளால் பறிபோவதாக போராட்டம் நடத்தினார்கள் எனக் கூறப்படுகிறது. இது போன்றுதான் ஒவ்வொரு புதிய கருத்தியல்கள், கண்டுபிடிப்புகள் நிகழும் போது பழைமையனாவை விலக்கப்படுகின்றன. மனிதர்கள் பெரிதும் பங்கும் கொள்ளும் நிறுவனமாக சமூகத்தில் தொழிற்படுவது சமயமாகும். சமயம் பிற நிறுவனங்களைப் போல விலக்கி விட முடியாத மனித உணர்வோடு இரண்டறக் கலந்த ஒன்றாகும். இதன் மீது விமர்சனம் வைத்தாலே பொறுத்துக் கொள்ளாதவர்களாக மனிதர்கள் இருப்பர். சமயத்தில் ஊறியவர்கள் பெரும்பாலும் நம்பிக்கையின் அடிப்படையில் வழுவாத சிந்தனை கொண்டவர்களாக இருப்பார்கள். அத்தகையோரிடம் காணப்படும் மூட வழக்கங்களும் உள்ளன என்பதை அடுத்தடுத்த சமுதாயத்தின் சிந்தனையாளர்கள் கண்டுணர்ந்து உரைத்தனர் என்பதை உலக வரலாற்றில் காணமுடிகிறது. தமிழகத்தில் சமயங்கள் எட்டாம் நூற்றாண்டுக்குப் பின் வேரூன்றிய தன்மையினவாய் காணப்படுகின்றன. சைவ, வைணவ சமயத்தவர்களின் கடவுளர்க் கோட்பாடுகள் மக்களிடம் வெகுவாகப் பரவியிருந்தன. எனவே தமிழகத்தில் பெரும்பாலோர் இவ்விரு சமயத்தவர்களேயவார். பக்தி இலக்கிய காலத்திற்குப் பின்னர் தோன்றிய வேத எதிர்ப்பு மரபுகளில் ஒன்றாக சித்தர் மரபு காணப்படுகிறது. சித்தர்கள் கடவுள் வழிபாட்டையும், சாதிய அடிப்படைகளையும் குறித்த கடுமையான விமர்சனங்களைத் தம்பாடல்களில் வெளிப்படுத்தினார். அக்காலச் சூழலில் இவர்களுடைய பாடல்கள் சமூகம் சார்ந்து பல்வேறு சீரிய கருத்துக்களைக் கொண்டனவாக இருந்தன என்பதை அறிய முடிகிறது.*

*இதே போலான சமய சீர்திருத்தச் சிந்தனைகள் கிறித்தவம் தோன்றிய இஸ்ரேயலர் சமூகத்திலும் தோன்றின. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எகிப்தில் பார்வோன் மன்னனிடம் அடிமைப்பட்டிருந்த மக்களாக யாக்கோபின் சந்ததியினர் இஸ்ராயேலர் என அழைக்கப்பட்டனர். அம்மக்களை விடுவித்து கானானிய தேசத்தில் குடியமர்த்தினார் மோசேயன் என்னும் இறைவாக்கினராகக் கருதப்படக் கூடியவர். இறைவனோடு நேரடியாகப் பேசியவர் ஆதலின் இவரும் இறைவாக்கினராகக் கொள்ளத்தக்கவரே. இறைவனிடமிருந்து இஸ்ராயேல் மக்கள் பின்பற்ற வேண்டிய கட்டகளைப் பெற்றுத் தந்தவர். சிறிது காலம் மலையின் உபவாச த்தின் பொருட்டுச் சென்று விட்டார். அவர் இல்லாத காலத்தில் இஸ்ராயேல் மக்கள் கடவுள் மறந்தனர். உருவங்களை வணங்கத் தலைப்பட்டனர். மக்களின் சீரற்ற தன்மையினை நல்வழியில் கொண்டு செல்ல இறைவாக்கினர்களை தோற்றுவித்தார். அம்மக்களிடமிருந்தே அவர்கள் உருவாகி இறைவனின் வாக்கினை அவர்களுக்கு எடுத்துரைத்தனர். மன்னர்கள் ஆட்சி தோன்றிய போது அவர்கள் சமயம் சார்ந்த தடுமாற்றங்களைச் சுட்டிக் காட்டினர். நேர்வழியில் நடத்தற்கு அறிவுறுத்தினர் எனக் காணமுடிகிறது.*

**தமிழ்ச் சித்தர்களின் இறைக் கொள்கை**

*இறைக்கொள்கை என்பது ஒவ்வொரு சமயத்திற்கும் மாறுபட்டு அமைந்திருப்பது*

*இயல்பாகும். சைவ, வைணவம் எனப்பட்ட இரு பெருமதங்கள் சிவன், திருமால் வழிபாட்டினை முதன்மையாகக் கொண்டனவாகும். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளை சைவ சித்தாந்தம் எடுத்துரைக்கிறது. வைணவம் சரணாகதித் தத்துவத்தைக் கூறுகிறது. இவ்விரண்டு சமயங்களும் வேதத்தினை அடிப்படையாகக் கொண்டனவாகும். சி த்தர்களில் மூலவராகக் கருதப்படும் திருமூலர் சைவ சமயத்தினர் ஆவார் திருமூலர் வேதநெறி - ஆகமநெறிகள் குறித்து தேவார மூவர்க்கும் முன்பே பாடியவர். இவரது காலத்தைக் கி.பி.5ஆம் நூற்றாண்டு என வரையறுப்பர். சன்மார்க்கி எனும் முறையில் இவர் வேதநெறி, ஆகமநெறி ஆகிய இரு மரபுகளையும் இணைத்து வைத்தவர்1 என்னும் கூற்றானது சித்தர்களில் ஒருவராகக் கருதப்படுகின்ற திருமூலர் தமிழகத்தில் சைவ சமயத்தினை நெறிப்படுத்தியவரகக் கருதப்படுகிறார். அது போல சைவ சமயத்தின் கொள்கைகளை பக்தி இலக்கியங்களும், சிவஞானமாபாடியமும் வரையறுத்தன எனக் கூறப்படுவதுண்டு.சைவ சித்தாந்தத் தத்துவத்தை உலகப் பொருளனைத்தையும் சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் மூன்றனுள் அடக்கி விடும் பதி - இறைவன், தானே அறிபவன், பசு-உயிர் அறிவிக்க அறிவது, பாசம் எனப்படும் இவ்வுலகப்பொருள்கள் அனைத்தும் அறிவித்தாலும் அறியா. இறைவன் அதிசூக்கும சித்தாகிய அறிவுப் பொருள், உயிர்கள் தூல சித்தாகிய அறிவுப்பொருள், பாசமாகிய உலகப்பொருட்கள் அசித்தாகிய சடப்பொருட்கள்2 என்று பதி, பசு. பாசம் என்னும் முப்பொருள் உண்மை குறித்துக் கூறுகிறார் மு.தேவகி. இவ்வாறு சைவ சித்தாந்த கோட்பாடுகள் வரையறுக்கப்படுவதன் மூலம் இறைவன் என்பவன் அதிசூக்குமப்பொருள் என்பது உணரப்படுகிறது. இவ்வதி சூக்குமப் பொருளாக இருத்தலின் உருவத்தில் காண்பது அறிவீனம் என்பதுதான் சித்தர்களின் வாதமாகப் பாடல்களில் வெளிப்படுகிறது. தானே அறிய வேண்டிய ஒருவன்தான் இறைவன் என்றும் கூறுவர். மந்திரங்களால், அர்ச்சனைகளால், பூச் சூடுவதால், நைவேத்தியம் படைப்பதால் இறைவனை அடைய முடியாது என்பர்.*

**இறைவாக்கினர்கள்**

*பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இறைவன் மக்களை வழி நடத்துவதற்காக தோற்றுவித்தவர்களே இறைவாக்கினர்கள் எனப்பட்டனர். இவர்கள் இறைவனின் சிந்தனையை மக்களிடம் தெரிவிப்பவர்கள் எனக் கருதப்பட்டனர். இறைவனோடு நேரடியாகப் பேசும் தலைவர்களாக மோசே, சாமுவேல், யோசுவா ஆகியோர் இருந்தாலும் அவர்களும் இறைவாக்கினர்களாகக் கருதத் தக்கவர்களேயாவர். பழைய ஏற்பாட்டுக் காலம் என்பது கிறித்துவுக்கு முந்தைய காலத்தில் நிகழ்ந்ததாகும். ஆபிரகாம், நோவா ஆகியோரும் கூட இறைவனிடம் நேரடியாகப் பேசியவர்கள் எனப்படுகின்றனர். அவர்களும் மூலத் தந்தையர் என அழைக்கப்படுகின்றனர் ஆபிரகாம் வழி வந்தவர்களில் ஒருவரான ஈசாக்கு அவரது மகன்களில் ஒருவர் யாக்கோபு. இவருக்கு இரண்டு மனைவிகள் பன்னிரண்டு குழந்தைகள் ஆவர். இவர்களே எகிப்தில் பல்கிப் பெருகியவர்கள் எனப்படுகின்றனர். பின்பு தமக்கிருந்த யாவற்றையும் சேர்த்துக் கொண்டு புறப்பட்டு பெயேர்செபாவைச் சென்றடைந்தார். அவ்விடத்தில் தம் தந்தை ஈசாக்கின் கடவுளுக்குப் பலிகளை ஒப்புக் கொடுத்தார். அன்றிரவு கடவுள் இஸ்ரயேலுக்குக் காட்சி அளித்து யாக்கோபு யாக்கோபு என்றார். கடவுள் உன் தந்தையின் கடவுளான இறைவன் நானு எகிப்திற்கு செல்ல நீ அஞ்ச வேண்டாம்.3 என்று கூறுவதற்கிணங்க இஸ்ரயேல் தன் மக்களுடன் செல்கிறார். பஞ்ச த்தில் வாழ இயலாதவர்களுக்கு எகிப்தில் யோசேப்பு தானியம் வழங்கினான். அவற்றைப் பெறும் நோக்கில் சென்ற இஸ்ரயேலை யோசேப்பு தன் தந்தையெனக் கண்டு கொள்கிறான்.*

*அங்கு அடைக்கலமாகிறார்கள். எகிப்தில் அவர்கள் பின்பு அந்நாட்டைச் சார்ந்தவர்களால் அடிமைகளாக்கப்படுகிறார்கள். பின்பு மோசேயன் அவர்கள் விடுவித்தார். கானானிய நாட்டில் குடியேற்றினார். மக்களிடம் தீய நடத்தைகள் மிகுந்தன. இதனால் இறைவாக்கினர்களை தம் பொருட்டு இறைவன் அனுப்பினார். அவர்கள் மக்களின் செயல்களையும், மன்னர்களின் செயல்களையும் ஒழுங்குபடுத்தினர்.*

**உருவழிபாடு குறித்து இறைவாக்கினரும் சித்தர்களும்**

*சமயங்கள் யாவும் இறைக்கருத்துருவத்தை உடையவையே வழிபாட்டுக்குரிய தலங்களும், சின்னங்களும் காணப்படும். ஆனால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மக்கள் அவர்களை தோற்றுவித்த யாவேயை முதன்மைக் கடவுளாகக் கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் அவ்வப் போது இறைவனை மறந்து வேற்று வழிபாடுகளில் ஈடுபட்டதுண்டு. மோசேயன் மலைவாசத்திற்குச் சென்ற பின்பு இஸ்ராயேலர்கள் பொற்கன்றுகளைச் செய்து வணங்கத் தலைப்பட்டனர். ஆரோனிடம் மோசேயைப் பற்றிய செய்தியில்லை என்று கூறி தமக்கான கடவுளை செய்து தரக் கூறினர். ஆரோன் அம்மக்களின் பொன் நகைகளை வாங்கி பொற்கன்றினைச் செய்து வணங்கச் செய்தான். அவ்வாறே மக்கள் எல்லோரும் தங்கள் பொற்காதணிகளைக் கழற்றி அவற்றை ஆரோனிடம் கொண்டு வர அவரும் அவர்கள் கையியிலிருந்து அவற்றைப் பெற்றுக் கொண்டு உருக்கி வார்ப்பு அச்சில் வடிவம் கொடுத்து ஒரு வார்ப்புக் கன்று குட்டியைச் செய்தார். அப்போது அவர்கள் இஸ்ரயேலே உன்னை எகிப்து நாடடினின்று நடத்தி வந்த உம் தெய்வங்கள் இவையே என்றனர்4 என்று பொன் கன்றைச் செய்து வணங்கத் தலைப்பட்டமை கூறப்படுகிறது. இச்செயலுக்காக ஆரோனை மோசே கடிந்து கொள்கிறார். அவர்கள் பாவம் செய்து விட்டார்கள் என்று எடுத்துரைத்து இப்பாவத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற இறைவனிடம்இறைஞ்சுகிறார்.*

*இதன் பின்னரும் இறைவாக்கினர்கள் பலர் இத்தகைய போலி வணக்கத்தைக் கண்டிக்கும் விதமாக மக்களையும் அரசர்களையும் எச்சரிக்கின்றனர். இறைவனின் கட்டளைகளில் ஒன்றாக வேற்றுத் தெய்வ வணக்கம் கூடாது என்பது கூறப்படுகிறது. அதாவது உருவ வணக்கம் என்பது கூடாது. இறைவனையன்றி இறைவனால் படைக்கப்பட்ட எந்தப் பொருளையும் வணங்கக் கூடாது என்பதாகும். நீங்கள் உங்களுக்கெனச் சிலைகளையும் படிமங்களையும், கல்தூண்களையும், உருவாக்கிக் கொள்ள வேண்டாம். வணங்குவதற்கெனக் கற்சிலைகளை நாட்டில் நாட்ட வேண்டாம். ஏனெனில் நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்5 என்று இறைவனே கூறுவதாக அமைகிறது.*

*இத்தகைய போலி வழிபாட்டிலிருந்து மக்கள் மனம் மாறி திரும்பி வர மீண்டும் என கடவுளின் அழைப்பினை இறைவாக்கினர்கள் வெளிப்படுத்தினர். ஆயினும் சிறியோர், பெரியோர், குருக்கள், இறைவாக்கினர் அனைவரும் தவறான வழியை விட்டு விலகவில்லை. அத்துடன் சடங்குகளால், வழிபாடுகளால் யாவேயை அமைதிப்படுத்த முயலுகின்றனர். வாழும் வழியைப் பாடுவது தான் வழிபாடு. வழிபாடு நேரிய வாழ்க்கைக்கு இட்டுச் செல்ல வேண்டும். தவறான வாழ்க்கையை நடத்திக் கொண்டு வழிபாடுகளால் கடவுளைத் தேடுவது அவரையே ஏமாற்றுவதற்குச் சமம். அவரை ஏற்று அவரையே வழிபடுவோர் தமது தனிப்பட்ட, சமூக வாழ்வில் உண்மை வழிபாட்டை செயல்படுத்த வேண்டும். முரண்பட்ட வாழ்க்கை கடவுளுக்கு ஏற்புடையது அல்ல, பலிகளை விட கடவுள் யாவேக்குச் செவிமடுத்தலே உகந்தது*

*(1 சாமு. 15:22) (திருவிவி, ப.991-2) என்று விவிலியம் குறிப்பிடுகின்றமையைக் காணலாம். போலி வழிபாட்டை விடுத்து யாவேயை உண்மையான கடவுளாக ஏற்க வேண்டும் என மக்கள் வலியுறுத்தப்பட்டனர்.*

*யூதா நாட்டின் மக்கள் வேற்றுத் தெய்வங்கள் மேல்மோகங் கொண்டு அவற்றின் பின்னே அலைந்தனர் (2: 25), யாவேக்கு நேராக முகத்தையல்ல, முதுகையே காட்டினர் (2:27) என்ற இறைவாக்கினர் எரேமியாவின் வேதனைக் குரல் வெளிப்பட்டது. யாவேயின் சமுதாயம் பொய் வழிபாடுகளில் புரையோடிக் கிடந்ததையும் காம இச்சையைக் நுகர்ச்சிக்கு அடிமையாகி வழிபாடுகளில் தம் புனிதத் தன்மையை இழந்து நின்றதையும் (2:23, 24) எடுத்துக்கூறினர். இதன் மூலம் மக்கள் வேற்றுக் கடவுள்களை ஆர்வத்துடன் தேடிச் சென்றதை இறைவாக்கினர் விளக்குகின்றார். இதனால் யாவேயின் நிலம் தீட்டுப்பட்டுப் போயிற்று. அவர்களை யாவே தன் நிலத்திலிருந்து துரத்தி விடுவதே ஒரே பரிகாரமாகத் தென்படுகிறது. புணர்ச்சி வழிபாடுகள் எதற்கும் பயன்படாதவை என்பதை நிரூபிக்க, கடவுள் மழையை நிறுத்தி, நாட்டில் பஞ்சத்தை பன் மடங்காக்கினார். கடவுளே தம் தந்தை என உதட்டளவில் கூறிவிட்டு அளவுக்கு அதிகமான தீச்செயல்களில் தம்மை ஐக்கியப் படுத்திக் கொண்டனர் (3:2-5) கடவுளை மறந்து மக்கள் தீச்செயல்களில் ஈடுபடும் போது அவர்களை தண்டித்து நல்வழிப்படுத்தும் செயல்களை கடவுள் இறைவாக்கினர்கள் மூலம் நடைமுறைப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. கடவுளை இந்த அளவுக்கு துயரப்படுத்தியிருந்தாலும் மக்கள் தன் பக்கமாக திரும்பி வர அழைப்புத் தருகின்றார். தனது சினம் அவர்கள் மேல் விழாது எனக் மக்களை அமைதிப்படுத்தும் நிலையையும் அறியமுடிகிறது (3:12). அவர்கள் தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டும், திரும்பி வர தீர்மானம் செய்தால் போதும் (3:3.14). யாவே அவர்களைக் குணமாக்கி ஆரோக்கியப் படுத்தக் காத்திருக்கின்றார். யாவேயிடமிருந்து மட்டும் தான் மக்களுக்கு மீட்புக் கிடைக்கும்; பாகாலிடமிருந்து கிடைப்பது ஏமாற்றம் மட்டுமே என்பதைப் புரியாமல் மக்கள் வாழ்க்கை நடத்தினர் (3: 20-21) என்பதை எடுத்துக் காட்டியவர்கள் இறைவாக்கினர்கள் ஆவர். அக்காலச் சூழலில் மக்கள் இறை நம்பிக்கைகளில் பல்வேறு போலித் தனங்களைக் கடைபிடித்தனர் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.*

*இறைவாக்கினர்களைப் போலவே தமிழ்ச் சித்தர்கள் உருவ வழிபாட்டினைக் கடுமையான எதிர்த்தனர் எனக் காணமுடிகிறது. சிவவாக்கியரின் பாடல்களில் உருவ வழிபாட்டினை மறுத்துரைத்து அதனை போலி என உரைப்பதைக் காணலாம்.*

***காணவேண்டும் என்றுநீர் கடல்மலைகள் ஏறுவீர்***
***ஆணவம் அதல்லவோ அறிவில்லாத மாந்தரே***
***வேணும்என்றவ் வீசர்பாதம் மெய்யுளே தரிப்பீரேல்***
***தாணுவாக நின்றசிவன் தான் சிவம் அதாகுமே (சிவ.476)***

*என்னும் பாடல் இறைவனை புறத்தில் தேடுதல் அறிவீனம் என்று கூறுகிறது. தனக்குள் இருக்கும் ஈசனை காடு, மலை, மேடெல்லாம் தேடாதீர்கள் என்கிறார் சிவவாக்கியர். வெளியில் உள்ளவற்றை வணங்குவது அவற்றில் இறைவன் இருப்பதாகக் கருதுவது அறிவீனம் என்பதாகக் கூறுகிறார். தாம் படைத்த மிக உயர்ந்த படைப்பாக ஆறறிவு உடைய மனிதனைப் படைத்து அம்மனிதனுக்குள் அம்மனுக்குலத்தின் உயிரையே தனக்குரிய இருப்பிடமாகக் கொண்டு இறைவன் குடியேறியிருக்கிறான் என்பதற்கு அனைத்து வேத*

*நூல்களும் சான்று பகர்கின்றன6 என்ற கூற்றிற்கேற்பவே சித்தர்கள் மனித உயிருக்குள் ஒடுங்கி வாழும் இறைவனை வெளியில் தேடுவதை விமர்சிக்கின்றனர் எனலாம்.*

***பண்ணி வைத்த கல்லையும் பழம்பொருள் தென்றுநீர்***
***என்னமுற்று மென்னபே ருரைக்கின்றீர்க ரேழைகாள் (சிவ.230)***

*என்ற பாடலில் கல்லை செய்து வைத்து அதற்கு கடவுள் பெயர் வைத்துக் கொள்ளும் ஏழைகளே என்று கூறுகிறார். ஏழைகள் என்பது அறிவின் போதாமையைக் குறிக்கும் சொல்லாக இங்கு காணப்படுகிறது.*

***ஓசைபெற்ற கல்லைநீர் உடைத்துருக்கள் செய்கிறீர்***

*என்றும்*

***தேவர்கல்லு மாவரோ சிரிப்பதன்று என் செய்வேன் (சிவ.121)***

*என்றும்*

***கல்லுவெள்ளி செம்பிரும்பு காய்ச்சிருந்த ராக்களில் (சிவ.508)***

*என்றும் கூறப்படும் பாடல்களில் கல்லை உருவாகச் செய்து வைத்து அதனை கடவுள் என்றால் சிரிப்பதன்றி வேறென்ன செய்ய முடியும் எனக் கூறுவதாக அமைகிறது.*

***"நட்டகல்லைத் தெய்வமென்று காலுபுட்பம் சாத்தியே***
***சுற்றிவந்து மொண்மொணென்று சொல்லுமந்திரம் ஏதடா?***
***நட்டகல்லும் பேசுமோநாதன் உள்ளிருக்கையில்?***
***சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?" (சிவ -520)***

*என்னும் பாடலில் கல்லிற்குப் பூசை செய்து வணங்கும் முறையை கேலி செய்து விமர்சனம் செய்வதைக் காணலாம். நட்ட கல்லைத் தெய்வமென்று அதற்குப் பூசை செய்வதாக மந்திரங்கள் ஓதுவது ஏன் என்று கேட்டு நட்ட கல் பேசுமா இறைவன் உள்ளத்தில் இருக்கும்போது என்றும் அடுப்பில் வைத்து செய்த குழம்பின் சுவையை பாத்திரம் அறியுமா அதுபோலானது இந்தப் போலி வழிபாடு என்று கூறுவதாக அமைகிறது.*

**முடிவுரை**

*சமயங்கள் பலவாக இருந்தாலும் சிலவற்றில் ஒன்றுபடும் தன்மையினைக் காணமுடிகிறது. பழங்காலத்து இஸ்ராயேல் மக்களிடம் தோன்றிய இறைவாக்கினர்கள் போலி வழிபாட்டை கடிந்தனர். அது கூடாது என்று இறைவன் விதித்திருப்பதால் அதனைச் செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று எச்சரித்தனர். அது போலவே சைவ சமய மரபில் தோன்றிய சித்தர்கள் கல்லை பூசை செய்து வழிபடும் வழக்கத்தைக் கடிந்தனர். இறைவாக்கினர்கள் இறைவனோடு பேசும் ஆற்றல் பெற்றவர்கள் எனக் கூறப்படுகிறது. ஆனா`ல் உ`ளளத்தில் இருக்கும் கடவுளோடு சேர்ந்து கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களாகவே சித்தர்கள் குறிப்பிடப்படுகின்றனர். சித்தர்கள் கல்லை கடவுள் என்று பெயரிட்டு வழிபடுவது அறிவீனம் என்று கடுமையான சொற்களில் பேசுகின்றனர். இவ்வாறு இறைவாக்கினர்களும் சித்தர்களும் போலி வழிபாட்டினைக் கடிந்துரைத்தலில் ஒன்றுபடுகின்றனர் என்பதைக் காணமுதடிகிறது.*

**பயன்பட்ட நூல்கள்**


1. *த.தியாகராசன், பெரியபுராணம், சமுகப் பின்னணியும் மனித உறவுகளும், ப.31*
2. *மு.தேவகி, ஐந்தெழுத்து அருள்நிலை, ப.36*
3. *திருவிவிலியம் (பொதுமொழிபெயர்ப்பு) தொடக்கநூல்,46:1*
4. *மேலது, விடுதலைப் பயணம்.32*
5. *மேலது, லேவியர்*
6. *ஆ.கருணாநிதி, சித்தர் இலக்கியங்களில் சமுகப் பார்வை, ப.43*